# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110297

1. District மாவட்டம் : கரூர் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 03/AC/2021 Date நாள்: 16.04.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 23.03.21-ம் தேதி 16.00 மணிக்கு [illegible]

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 15.04.21-ம் தேதி 14.00 மணிக்கு [illegible]

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.04.21 Time : நேரம் 17.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.04.21 Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 km கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 1) சணப்பிரட்டி, தொழிற்பேட்டை வாரியம் காலிமனையிடத்தில் 2) கரூர் ஜீவா காமராஜ் மார்க்கெட் கடை அருகில்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கா. பாஸ்கரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காளியப்பன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation தொழில் Supervisor (g) Address : முகவரி 33 அண்ணா நகர் தெரு, வெங்கமேடு, கரூர் N/o 56 A கீரியம்பட்டி தெரு, வெங்கமேடு கரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. சிதாகர், மார்க்கெட் சர்வேயர், சணப்பிரட்டி பகுதி கரூர் தாலுகா, கரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நகோ லஞ்ச ஒழிப்பு தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக இன்று பணி 03/AC/2021 u/s 7(1)(?) of prevention of corruption Act 1988 as amended in 2018 ன் தொடர்ச்சி தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .............................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 16/04/2021

[signature] 16/04/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.04.21 at 11.30 hrs.

Name: பெயர் ஜெ. [illegible]
Rank: நிலை No. [illegible] காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு [illegible], நகோ

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No 3/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஜெ.ரூபாகீதாராணி ஆகிய நான் 15.04.2021 ம் தேதி 17.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.கா.பாஸ்கரன், த/பெ.காளியப்பன், எண்.33, அன்னை சத்யா தெரு, வெங்கமேடு, கரூர். தற்போது:- 56A, சத்தியமூர்த்தி தெரு, வெங்கமேடு, கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் கா.பாஸ்கரன், த/பெ.காளியப்பன், எண்.33, அன்னை சத்யா தெரு, வெங்கமேடு, கரூர். தற்போது:- 56A, சத்தியமூர்த்தி தெரு, வெங்கமேடு, கரூர். பெறுநர் இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. கரூரில் "டெக்சியார்டு இன்டர்நேசனல்" என்ற நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 6.3.2020 ஆம் தேதி எனது அம்மா திருமதி.துளசிமணி கரூர் தொழிற்பேட்டை தில்லை நகரில் வசிக்கும் ராஜாமணி என்பவரிடமிருந்து கரூர் வட்டம் சணப்பிரட்டி கிராமம் (ஆசிரியர் காலணி) க்கு உட்பட்ட அ.பு.சர்வே எண்.1395/B -ல் மனை எண்.57 (834 சதுர அடி) மற்றும் மனை எண்.58 (764 சதுர அடி) காலி மனை இடங்களை ரூ.4,83,000/-க்கு கிரையமாக பெற்றார். பின்பு 31.12.2020 ஆம் தேதி எனது அம்மா திருமதி.துளசிமணி காலி மனை எண்.57 யை எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்தார். மேற்படி இரண்டு காலி மனை இடங்களுக்கும் எனது பெயரிலும், எனது அம்மா பெயரிலும் பட்டா இல்லாததால் கடந்த 6.1.2021 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் எனது பெயரிலும், 19.1.2021 ஆம் தேதி எனது அம்மா பெயரிலும் கூட்டு பட்டா மற்றும் தனி பட்டா பெறுவதற்காக விண்ணப்பங்கள் செய்தேன். கூட்டு பட்டா விண்ணப்பங்களின் அடிப்படையில் விஏஓ விசாரணை செய்தபின் சுமார் ஒரு வாரம் கழித்து இணையதளத்தில் பார்த்த போது எனது பெயரிலும், எனது அம்மா பெயரிலும் மேலும் சில நபர்கள் பெயரில் கூட்டு பட்டா வந்திருந்தது. அதன் பிறகு தனிபட்டா சம்மந்தமாக கடந்த 18.3.2021 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு சணப்பிரட்டி பிர்கா சர்வேயர் திரு.சுதாகர் அவர்கள் அவருடைய செல்போன் எண்.9047859499 லிருந்து என்னுடைய எண்.9566640333-ற்கு தொடர்பு கொண்டு இடத்தை அளக்க வருவதாகவும், அதற்கு என்னை சுமார் 12 மணிக்கு விஏஓ ஆபிசில் இருக்குமாறும் சொன்னார். ஆனால் அன்றைய தினம் எனக்கு வேலை அதிகமாக இருந்ததால் நான் விஏஓ ஆபிசிற்கு போக முடியவில்லை. பின்பு 23.3.2021 ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு சணப்பிரட்டி பிர்கா சர்வேயர் திரு.சுதாகர் அவர்கள் அவருடைய செல்போன் எண்.9047859499 லிருந்து என்னுடைய எண்.9566640333-ற்கு மீண்டும் தொடர்பு கொண்டு இடத்தை அளக்க மத்தியானமாக வருவதாக சொன்னார். நான் அவர் சொன்னபடி மதியம் சுமார்

2.15 மணிக்கு என்னுடைய இடத்திற்கு சென்று சர்வேயருக்கு போன் செய்தேன். அப்போது அவர் சாப்பிட்டுவிட்டு வருவதாக சொன்னார். அதேபோல் சுமார் 3.20 மணிக்கு அவர் என் இடத்திற்கு வந்தார். அவர் கையில் நீல நிற துப்பாக்கி போன்ற கருவியும், வெள்ளை நிறத்தில் சிலேடு போன்ற பொருளும் வைத்திருந்தார். அந்த சிலேட்டை என்னை பிடித்துக் கொள்ளச் சொல்லி என்னுடைய இடத்தை சுற்றிலும் அளவீடு செய்தார். அளந்து முடித்த பின்பு மாலை சுமார் 4 மணி அளவில் ஒரு மனைக்கு ரூ.10,000/- வீதம் இரண்டு மனைக்கு ரூ.20,000/- தனக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் இந்த பணத்தை எங்கு கட்ட வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் கட்டவேண்டியதில்லை, இந்த இரண்டு விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்து மேலதிகாரிக்கு அனுப்பவேண்டும், அதற்கு அவருக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றேன். அதற்கு அவர் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு தேர்தலுக்கு பிறகு போன் பண்ணுமாறு சொல்லிவிட்டு போய்விட்டார். நான் அவர் சொன்னது போல் போன் செய்யவில்லை. இந்த நிலையில் இன்று 15.4.2021 ஆம் தேதி மதியம் சுமார் 1.35 மணிக்கு சர்வேயர் திரு.சுதாகர் என்னை மறுபடியும் செல்போனில் தொடர்பு கொண்டு பணம் ரெடிபண்ணீட்டியா என்று கேட்டார். நான் என்னால் பணம் ரெடி பண்ண முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் கரூரில் சர்ச் கார்னர் அருகே வந்து அவரை சந்திக்குமாறு சொன்னார். நான் பைக்கில் புறப்பட்டு போவதற்குள் மறுபடியும் போனில் கூப்பிட்டு சீக்கிரம் வரச்சொன்னார். நான் உடனே அங்கு சென்று "ட்ரீம் வாக்" என்ற துணிக்கடை அருகில் மதியம் சுமார் 2 மணிக்கு அவரை சந்தித்தேன். அப்போது அவர் தான் கேட்ட பணம் தனக்கு மட்டும் இல்லை என்றும், அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்றும், தனக்கு மிகவும் குறைந்த பங்கே கிடைக்கும் என்றும் சொன்னார். நான் என்னால் இவ்வளவு பணம் புரட்ட என்னால் முடியாது கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.2,000/- குறைத்துக் கொண்டு மீதியை கொடுக்கச் சொன்னார். நான் ஒவ்வொன்றுக்கும் 2 ஆயிரமா என்று கேட்டேன். அதற்கு அவர் மொத்தமாக 2 ஆயிரம் குறைத்துக் கொண்டு ரூ.18,000/- கொடு இல்லையினா வேலை ஆகாது என்றார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நீ உடனே பணத்தை கொடுத்தால்தான் உனக்கு பட்டா உடனே கிடைக்கும் என்றும் சொன்னார். அப்போது அவர் நாளைக்கு பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு போன் செய், நான் இந்த இடத்திலேயே வந்து பணத்தை வாங்கி கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். எனக்கு பிர்கா சர்வேயர் திரு.சுதாகர் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து தனிப்பட்டாக்கள் வாங்க விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.18,000/- லஞ்சம் கேட்கும் பிர்கா சர்வேயர் திரு.சுதாகர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள Sd/- (K.Baskaran) 15/4/2021.

Sir, Received the complaint on 15.04.2021 at 17.30 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be

bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 at 08.00 hrs today on 16.04.2021. Sd/- J.Rupageetharani, 16.04.2021 Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.K.Baskaran, S/o.Kaliyappan, Door No.33, Annai Sathiya Street, Vengamedu, Karur, Now at No.56A, Sathiyamoorthy Street, Vengamedu, Karur, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

16/04/21

(J.Rupageetharani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.